**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 80** **நாள்: 07.02.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் இலவச ஒப்பனை அறைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் மக்களுடனான கருத்துக்களை கலந்தாலோசிக்கும் சமூகக் கூட்டம் நாளை (08.02.2026) நடைபெறுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் இலவச ஒப்பனை அறைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் மக்களுடனான கருத்துக்களை கலந்தாலோசிக்கும் சமூகக் கூட்டம் நாளை (08.02.2026) நடைபெறுகிறது.

சென்னை மாநகராட்சியின் சமூக மேம்பாட்டுப் பிரிவு முன்முயற்சியின் கீழ், நாளை (08.02.2026) காலை 10.00 மணியளவில் பெருநகர சென்நனை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் உள்ள இலவச ஒப்பனை அறைகள் அமைந்துள்ள பகுதிகளில், (437 இடங்களில்) "நம் கழிப்பறை நம் பொறுப்பு" என்ற பிரச்சாரக் கருப்பொருளில் அப்பகுதிகளைச் சார்ந்த மக்கள் பங்கேற்கும் சமூகக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில்,

- கழிப்பறைக்கு உரிமை மற்றும் பொறுப்பு குறித்தும்
- இலவச ஒப்பனை அறைக்கு வெளியே பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா, கை கழுவுதல், கண்ணாடி, தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான துப்புரவு விளக்கப்படம், உடனடி சிறு மற்றும் பெரிய பழுது பார்க்க வேண்டிய பணிகள், உலகளாவிய நெறிமுறைகளுடன் அமைக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கான கழிப்பறைகள், சிறுநீர் கழிக்கும் இடத்தில் மாசினை தடுப்பதற்காக வைக்கப்படும் பட்டைகள், சுத்தம் செய்தல், சுழற்சி முறையில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள், புகார்கள் மற்றும் கருத்துகளுக்கான QR குறியீடு, மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு அமைப்பு, காலமுறையில் தண்ணீர் தொட்டி மற்றும் நீர் தரத்தினை பரிசோதித்தல், காற்றோட்டம்,

குப்பைகளையும் சானிட்டர் நாப்கின்களையும் குப்பைத் தொட்டியில் போடுதல் உள்ளிட்டவற்றை எடுத்துரைத்தல்.

- கழிப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் குப்பை கொட்டுவதைத் தவிர்த்தல்
- ஒப்பனை அறைகளை சேதப்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் சிறப்பாக கையாளுதல் குறித்தும் எடுத்துரைத்தல்

ஆகிய செயல்பாடுகள் மக்கள் பங்கேற்கும் இந்த சமூகக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு இலவச ஒப்பனை அறைகளின் செயல்பாடுகளை மேலும், சிறப்பாக செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட இலவச ஒப்பனை அறைகளின் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பங்கேற்று தங்களது கருத்துக்களை வழங்கலாம்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**